**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 205/2022**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 14.08.2023**

| | |
|---|---|
| **Name : முஸ்தபா** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் கேரளா மாநிலம், சேதுரெட்டியில் குடியிருந்து பூவியாபாரம் வேலை செய்கிறேன். விபத்தில் இறந்தது எனது மகன் ஆவார். கடந்த 08.01.2021-ம் தேதி மதியம் 1 மணிக்கு இருசக்கரவாகனத்தில் எனது மகனும் பெங்களூர் கல்லூரியில் படித்து முடித்துவிட்டு கல்யாணத்திற்காக கேரளா வரும்வழியில் மேச்சேரி உணவகம் அருகே வந்தபோது எதிரில் வந்த TN 34 V 8364 என்ற மாருதி ஆம்னி கார் மோதி விபத்து ஏற்பட்டதாக அவனுடைய நண்பர் எனக்கு தகவல் தெரிவித்தார். பிறகு ஓமலூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தபோது வரும்வழியிலேயே இறந்துவிட்டதாக சொன்னார்கள். இது சம்மந்தமாக நான் காவல் நிலையம் சென்று புகார்மனு கொடுத்தேன். புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

2. காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுக்கும்போது மணி எத்தனை இருக்மென்றால் சரியாக நியாபகமில்லை. சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. புகார் கொடுத்ததும் என்னை போலிசார் விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. தமிழ் எழுத தெரியாது ஆனால் படிக்க தெரியும் என்பதால்

அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. தற்போது நீதிமன்றத்தில் சொன்ன மாதிரிதான் போலிசார் விசாரித்தபோது சொன்னேனா என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/-தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.II, Mettur**
**Case No : C.C. 205/2022**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 14.08.2023**

| Name : சாகுல் அமீது | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் கேரளா மாநிலம் ,திருச்சூரில் குடியிருந்து மின்சாரம் சம்மந்தமாக வேலை செய்கிறேன். விபத்தில் இறந்தது எனது தங்கையின் மகன் ஆவார். கடந்த 08.01.2021–ம் தேதி மதியம் 1 மணிக்கு இருசக்கரவாகனத்தில் எனது தங்கை மகனும் அவனுடைய நண்பரும் பெங்களூர் கல்லூரியில் படித்து முடித்துவிட்டு கல்யாணத்திற்காக இருசக்கரவாகனத்தில் கேரளா வரும்வழியில் மேச்சேரி உணவகம் அருகே வந்தபோது எதிரில் வந்த மாருதி ஆம்னி கார் மோதி விபத்து ஏற்பட்டது. பிறகு ஓமலூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தபோது வரும்வழியிலேயே இறந்துவிட்டதாக சொன்னார்கள். சவக்கிடங்கில் வைத்து பிரேத பரிசோதனை செய்தபோது நான் இருந்தேன். என் முன்பாக பிரேத பரிசோதனை செய்தனர். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

2. எப்போது என்னை விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்து அன்றே போலிசார் விசாரித்தனர் அதன் பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை. சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. தற்போது நீதிமன்றத்தில் சொன்ன மாதிரிதான் போலிசார் விசாரித்தபோது சொன்னேனா என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டுர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 205/2022**

**Prosecution witness : அ.சா. 3** **Date : 14.08.2023**

| | |
|---|---|
| **Name : பல்கீஸ்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் கேரளா மாநிலம் ,சேதுரெட்டியில் குடியிருந்து வருகிறேன். விபத்தில் இறந்தது எனது மகன் ஆவார். கடந்த 08.01.2021–ம் தேதி மதியம் 1 மணிக்கு இருசக்கரவாகனத்தில் எனது மகனும் அவனுடைய நண்பரும் பெங்களூர் கல்லூரியில் படித்து முடித்துவிட்டு கல்யாணத்திற்காக இருசக்கரவாகனத்தில் கேரளா வரும்வழியில் மேச்சேரி உணவகம் அருகே வந்தபோது எதிரில் வந்த மாருதி ஆம்னி கார் மோதி விபத்து ஏற்பட்டது. பிறகு ஓமலூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தபோது வரும்வழியிலேயே இறந்துவிட்டதாக சொன்னார்கள். சவக்கிடங்கில் வைத்து பிரேத பரிசோதனை செய்தபோது நான் இருந்தேன். என் முன்பாக பிரேத பரிசோதனை செய்தனர். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

2. விபத்தில் இறந்தது எனது மகன் என்றால் சரிதான். எப்போது என்னை விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்து அன்றே போலிசார் விசாரித்தனர் அதன் பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை. சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. தற்போது நீதிமன்றத்தில் சொன்ன மாதிரிதான் போலிசார் விசாரித்தபோது சொன்னேனா என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**

# **DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 205/2022**

**Prosecution witness : அ.சா. 4** **Date : 14.08.2023**

| | |
|---|---|
| **Name : அன்சார்.** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் கேரளா மாநிலம் , பத்தினாம்டேட்டா என்ற முகவரில் குடியிருந்து சோப் கம்பெனியில் வேலை செய் வருகிறேன். விபத்தில் இறந்தது எனது நண்பர் ஆவார். கடந்த 08.01.2021–ம் தேதி மதியம் 12.30 மணிக்கு இருசக்கரவாகனத்தில் நான் ஒரு வாகனத்திலும், எனது நண்பர் நியாஸ் என்பவர் இன்னொரு இரு சக்கர வாகனத்திலும் பரீட்சை முடிந்த போது விட்டிற்கு செல்வதற்காக பெங்களூர் பகுதியில் இருந்து கேரளவிற்க்கு செல்வதற்காக மேச் சேரி பகுதி வழியாக வந்த போது விபத்து நடந்ததது.

2. நான் பயணம் செய்த இருசக்கர வாகனத்தின் பதிவு எண் தெரியாது. எனது நண்பர் பயணம் செய்த பல்சர் வாகனத்தின் எண். KL 36 E 3904 ஆகும். நாங்கள் இருவரும் தான் தனிதனியாக பெங்களூர் இருந்து கிளம்பி கொரோன காலம் என்பதால் இருசக்கர வாகனத்தில் கேரளவிற்கு வந்து கொண்டிருந்த போது எனது நண்பர் நியாஸ் என்பவர் இருசக்கர வாகனத்தை ஒட்ட, பின்னால் இஜாஸ் அகமது உட்கார்ந்து கொண்டு வந்தார். அப்போது நாங்கள் திமிரிகோட்டை கோல்டன் தபா அருகில் வரும் போது நியாஸ் முன்னால் சென்ற சமயத்தில், எதிரே வந்த ஆம்னி பதிவு TN 34 V 8364 என்ற கார் அதிவேகமாக வந்து எனது நண்பா் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. அதில் நியாஸ் என்பவருக்கு தலையில் காயம் ஏற்பட்டும், பின்னால் அமர்ந்து வந்த அஜாஸ் என்பவருக்கு முச்சு குழாழில் காயம் ஏற்பட்டது. இருவரையும் தனியார் அம்புலன்ஸ் முலமாக அரசு மருத்தவமனை கொண்டு செல்லும் போது , நியாஸ் செல்லும் வழியிலேயே இறந்து விட்டதாக மருத்துவர்கள் எனக்கு தகவல் தெரிவித்தார்கள்.

3. சவக்கிடங்கில் வைத்து பிரேத பரிசோதனை செய்தபோது நான் இருந்தேன். என் முன்பாக பிரேத பரிசோதனை செய்தனர். நான் சம்பவ சமயத்தில பதட்டமான நிலையில் இருந்த போது ஆம்னி வேன் ஓட்டுனரை பார்க்கவில்லை. நானும் பதறிபோய் வடிடேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

4. இந்த வழக்கு சம்பந்தமாக எப்போது என்னை விசாரித்தார்கள் என்றால் சம்பவ தேதியிலேயே என்னை விசாரித்தார்க்ள். பிறகு என்னை விசாரிக்கவில்லை. முதன் முதலாக இரு சக்கர வாகனத்தில் அப்போது தான் கொரேனா காலம் என்பதால் சென்றோம். எங்களுக்கு முன்னால் நியாஸ் சென்ற இரு சக்கர வாகனம் எவ்வளவு துாரத்தில் சென்றது என்றால் 10 மீட்டர் துாரத்தில் மூன்னால் சென்றது. சாலை கு்ண்டு குழியுமாக உள்ளது என்றால் சரிதான். அதன் காரணமாக வேகமாக யாரும் செல்ல முடியாது என்றால் நாங்கள் சென்ற சாலை பகுதி குண்டு குழியுமாக இருந்தது. ஆம்னி சென்ற பகுதி நல்ல நிலையில் இருந்தது. நாங்கள் தான் வலது பக்கமாக குண்டு குழியினை தவிர்க்க வேண்டி ஏறி சென்று மோதி விபத்து ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல.

5. இருவரும் தலை கவசம் அணிந்து சென்றார்கள் என்றால் ஆமாம். இருவரும் ஓட்டுனர் உரிமம் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் ஆம்புலன்ஸ்க்கு தகவல் கொடுக்கவில்லை என்றால் ஊரில் உள்ளவர்கள் தெரிவித்தார்கள். காவலருக்கு நாங்கள் தகவல் கொடுத்தோமா என்றால் இல்லை. ஆம்னி ஓட்டுனரின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை எனது நணபரின் கவனக்குறைவால் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. விபத்து நடந்போது அங்கு எத்தனை நபர் இருந்தனர் என்றால் 15 பேர் இருந்தார்கள்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டுர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 205/2022**

**Prosecution witness : அ.சா. 5** **Date : 14.08.2023**

| | |
|---|---|
| **Name : ஷிபில்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

<u>முதல் விசாரணை</u>

1) நான் கேரளா மாநிலம் ,திருச்சுரில் குடியிருந்து ஆட்டோ ஓட்டுனராக வேலை செய்கிறேன். விபத்தில் இறந்தது எனது மகன் முகமது நியாஸ் ஆவார். கடந்த 08.01.2021–ம் தேதி மதியம் 1 மணிக்கு இருசக்கரவாகனத்தில் எனது மகனும் அவனுடைய நண்பரும் பெங்களூர் கல்லூரியில் படித்து முடித்துவிட்டு கல்யாணத்திற்காக இருசக்கரவாகனத்தில் கேரளா வரும்வழியில் மேச்சேரி உணவகம் அருகே வந்தபோது எதிரில் வந்த மாருதி ஆம்னி கார் மோதி விபத்து ஏற்பட்டது. பிறகு ஓமலூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தபோது வரும்வழியிலேயே இறந்துவிட்டதாக சொன்னார்கள். சவக்கிடங்கில் வைத்து பிரேத பரிசோதனை செய்தபோது நான் இருந்தேன். என் முன்பாக பிரேத பரிசோதனை செய்தனர். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

2. எப்போது என்னை விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்து அன்றே போலிசார் விசாரித்தனர் அதன் பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை. சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. தற்போது நீதிமன்றத்தில் சொன்ன மாதிரிதான் போலிசார் விசாரித்தபோது சொன்னேனா என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**